சதுரகிரிக்கும்பாட்டுடைத்தலைவன்வரும்பவனிக்குஞ்சிலேடை.

பின்கடை மடக்கு

ஆர்வல் லியங்கள் பிலக்கடமா
 னங்கு லாவப் பொருந்தானை
 யடரச் சிலம்பு மாமயிலு
 மாறு மெடுக்க வெண்கவரி
நேர்நின் றிலங்கி யங்குடைக
 ணெருங்கச் சினக்கும் பரியுலவ
 நிறைவாங் காவு மிசைகாட்ட
 நேரா மதனன் முதற்பகழித்
தார்நின் றிலங்கும் புயசயிலன்
 றனவான் செயநா கய்யதுரைச்
 சாமி யுனைப்போன் மதயானை
 தன்னிற் பவனி வரப்பார்த்தேன்
போர்வேள் வந்தெ திருமலையே
 பொறுக்கேன் வருகதிருமலையே
 போக்கா தினம திருமலையே
 புரிவாய்கருணை திருமலையே (௬௰)

இதுவுமது.

இடையி னிற்கை நகம ழுத்தி
யிசைவ ளைக்கு நிகர்க ழுத்தி
யினிய புட்கள் குரலெ ழுப்பி
யிருது டைக்கு மிடையு தித்த
கடித டத்தின் மணியி னுற்ற
கரம ழுத்தி யமுது மிக்க
கடலு டைத்த பரிசெ னத்தி
கழவெ ழுப்பி முலைசு வைத்து
விடிய மட்டு முபரி வித்தை
விபரி தத்தை மிகந டத்தி
விரைமி குத்த மலர ணைக்குண்
மௌந கைத்து மனதி னுற்ற
தடைய றப்பி னனுப வித்த
சாமி நாக யேந்தி ரமால்
தாக மோக மதுத விர்த்த
சமய நல்ல சமயமே. (௯௨)

திருவேலை யிற்பள்ளி கொண்டவன் சேவடி சேவிப்பதே
பெருவேலை யாக்கொண்ட நாகய ராசன் பிறங்கனல்வீ
ரொருவேலை யேந்திவெற் பொன்றெறிந்தானென்ப தோர்ந்து கொண்டோ
விருவேலை யேந்தி யெறிந்தீர் வரைக ளிரண்டினையே. (௰)

தென்பாய்த் திகழ்மரு தூராளு நாகய தீரதுரை
தன்பால னாகய மால்வெற்பி லேபர தற்கிணையா
யன்பாய்த் தரணியைப் பார்த்துநின் றேன்திரு வாழியைநான்
முன்பாகக் கண்டு மகிழ்வதெப் போதினிமொய்குழலே. (௰௧)

புத்திக்கி யூகி நளனீதிக் கன்பொடு போற்றுமனப்
பத்திக்கு மார்க்கண்டன் கட்டாரி நாகய பாண்டியன்வெற்பி
லத்திக்கு மிச்சிக்கு மாதுளுக்கு மேனிற்கு மாவரைமேற்
றொத்திப் படருமென் செந்தா மரைகுயிற் றாமொழியே. ()

ஒருவாளஞ் சுற்றிய நேமிக்கு ளாணை யுறச்செலுத்தி
வருவான் புகழ்ப்பெறுங் கட்டாரி நாகய மன்னன்வெற்பி
லுருவாய் விளங்கிய மங்கையர் யாவர்க்கு மோராசே
திருவாலங் காட்டிற் பரங்குன்று தோன்றல் சிறப்புறுமே. ()

ஆவியொப் பாயெனைக் காவென் றுவல்லக்கொண்டம்மனு னுந்
தேவியைப் போற்றுந் துரைநாக யேந்திர தீரன்வெற்பிற்
காவியங் கைக்கொண் டிலக்கண மாவிண்டு காட்டியதா
னீவிரும் பாவலர் தாமுமொன் றுயது நேரிழையே. (௰௪)

தண்ணங் கிடைத்த மொழிமாதர் கும்பத் தனத்திலணி
சுண்ணங் கிடைத்த புயநாக யேந்திர துங்கன்வெற்பில்
வண்ணங் கிடைத்த மயில்போலுஞ் சாயன் மடக்கொடியீர்
கிண்ணங் கிடைத்தது தேனைவிட்டா லுண்டு கெற்சிதமே ()

சும்மா வொருநொடிப் போதுமி ராதுதொன் னூல்பழகு
நம்மா தவன்புகழ்க் கட்டாரி நாகய ராசன்வெற்பி
லெம்மா லுரைக்கத் தகாதசொ ரூபத்தி னேந்திழையே
யம்மாகும் பத்தனங் கண்டோம்பின் காண்கிலமஞ்சனமே ()

மெய்யா னதுநிலந் தோய்ந்திட வீழ்ந்து மிகவணக்கஞ்
செய்யாரை வேல்கொண் டடர்க்கின்ற நாகய தீரன்வெற்பின்
மையார் குழற்றிரு மங்கைநல் லீர்தகு மாமலையைக்
கையாற் பிடித்துடன் றாபிவிட் டீருத்துங் கம்பெரிதே (கூ௨

பட்சிக்கு மன்னக் குறைவின்றி யார்க்கும் படியளந்தி
ரட்சிக்கு மாலெங்கள் கட்டாரி நாகய ராசன்வெற்பி
லிச்சைக் கிசைந்த மடவீ ரமுத மிருக்கநம்பாற்
கச்சுக் கிடக்கு மிளநீர் கொடுத்த கருத்தென்னையே (கூ௩)

சாத்திரங் கண்ட பெரியோர்க்கும் வேந்தர் தமக்குமகா
நேத்திரம் போல்பவன் கட்டாரி நாகய நேசன்வெற்பீர்
கோத்திரங் கண்டங் குலமறிந் தோம்பின்பு முன்பிருந்தாற்
கோத்திரங் காணும் படிக்கருள் வீர்மகிழ் கூர்ந்திடவே (கூ௪)

பைநாகத் தின்முடி கண்டாளைத் தாங்கிப் பவனியொரு
கைநாகத் தின்மிசை யுல்லாச மாவருங் காளையெங்கண்
மெய்நாக யேந்திரன் வெற்பின்வண்டேரென்ன விள்ளுவம்யாம்
மைநாகத் தின்முடி கண்டுகண் டேரில்லை மற்றதையே. (௨௫)

முக்காலங் கண்ட பெரியோருஞ் செந்தமிழ் மூன்றுமுணர்
தக்கோரும் வாழ்த்திய நாகய மால்வரைச் சாரல்வண்டே
ரக்காரைக் கண்டு பழகிய வாதர வாலல்லவா
விக்கா லரையு மதியாம னீங்க ளிருப்பதுவே. (௨௬)

தாதுற்ற செய்யதண் டாமரைப் போதிற் றழைத்ததிரு
மாதுற்ற திண்புயன் கட்டாரி நாகய மன்னன்வெற்பிற்
கோதற்ற வண்மையி லேறிய தாற்குசு ணவிர்வண்டே
ரோதற் கரியவிடையேற்றஞ் செய்யி னுமாபதியே. (௨௭)

பணிதுன்னு மால்வரைக் கோர்மக வாய்வந்த பார்ப்பதிவாய்க்
கனியுண்ணு மீச னடிபோற்று நாகய காமன்வெற்பி
லினிதுண்ண வேண்டி யெழிற்றும்பி காள்பிடி யேங்கியிங்கே
தனிநின்று நைய விருட்கான் புகுந்த தகைமைநன்றே (௨௮)

அண்டின பேர்களை முற்றிலுங் காக்கு மதிபதியாந்
தண்டிகை வேந்தன் செயநாக யேந்திர சாமிவெற்பின்
வண்டினங் காண்மது பானத்தின்மேன்மனம்வைத்தவர்மாட்
டுண்டுகொ லோநடு ஞாயத்தைக்காண்கின்ற வொண்ணறிவே.

எல்லாரு மெல்லாப் பவுசுமுற் றோங்கி யிருப்பரென்று
வல்லார் புகழ்மரு தூர்நாக யேந்த்ரன் வரைச்சுரும்பீ
ருல்லாச மாகக் களவாச் செயுஞ்சிந்தை யொன்றைவிட்டுக்
கல்லாவின் கீழுறை யேநினைந் தாலுண்டு காரியமே. (ருரு)

பூணே பொறையுந் தருமமுந் தானென்று பூண்டசிம்ம
வாணே நிகர்க்கின்ற நாகய பூப னசலவண்டேர்
காணே னொருவஞ்சி மேல்வெறுப் பாகியென் கண்ணெதிரே
வீணே யறவிடை வீழ்ந்தது போலொரு வேடிக்கையே. (ருசு)

முப்போதும் பூசையின் மார்க்கண்ட னுமென்று மூன்றுலகு
மொப்போதுங் காமய நாகய பூபதி யோங்கல்வண்டே
ரெப்போது முங்கட் குறவான பூங்கொடி யின்மைகண்டு
மிப்போது பொங்க விடமனம் பூரித் திருந்ததென்னே. (ருஎ)

ஆகன கம்பணி வத்திரந் தாரணி யன்னநர
வாகனம் வாணர்க் கருணைக யேந்திரன் மால்வரையின்
மோகன ராக முதலா மிராக முழக்கும்வண்டேர்
பாகலை வேண்டி யவரையின் மேல்வெறுப் பானதென்னே. ()

அரவினி லாடுந் திருமான் முளரி யடியிணையைப்
பரவிய செங்கையன் கட்டாரி நாக்ய பாண்ட்யன்வெற்பில்
விரவிய மாதனஞ் சேர்கன வானை வெறுத்தளிகா
ளிரவலர் தம்மை யடுத்திருந் தீரிதி லென்பயனே. (ருகூ)

பண்டுகல் லானைக்கு வேழத்தை யீந்த பழம்பொருளே
விண்டுகொண் டாடிய கட்டாரி நாகய வேந்தன்வெற்பின்
வண்டுக ளேயொரு நல்வேளை நோக்கிவண் காவலரைக்
கண்டுகும் பிட்டுநின் றுலல்ல வாவுண்டு காரியமே. (௬ᾯ)

போரா லுயர்ந்த புயநாக யேந்திரன் பொங்கர்வண்டீ
ராரா லுஞ் சொல்லத் தகாதகண் காட்சியந் தத்தின்மிசை
யோரா விரண்டத்தி வேயிரண் டோர்கழு குற்றதல்லாற்
காரார்ந்த மற்றொரு சோலையி னீவிருங் கண்ணுற்றதே. (௬௧)

ஈரங்க மாறொன்று பெண்ணொன்று மாகி யிருந்ததொன்றி
யோரங்க மான வனைப்போற்று நாகய யோகன்வெற்பி
னீரங்க மாகிய காவிரி வாய்ந்துநின் றுடிவண்டீர்
சீரங்க மாத வரையே நினைத்திவிர் செப்புமின்னே. (௬௨)

கீர்த்தியுஞ் செல்வமுந் தாராள மாகக் கெழுமிவரும்
பார்த்திப னுமெங்க ளுநாகய மால்வரைப் பாங்கர்வண்டீர்
கார்த்திகைக் கேகிப் பரங்குன்றின் கீழ்வளர் கந்தனையே
பூர்த்திய தாய்த்தரி சித்தீ ரிலையுங்கள் புத்திநன்றே. (௬௩)

தாவிநன் மாதவஞ் செய்தே மிருகண்டு தந்தசிரஞ்
சீவியி னன்றனை யொப்பான நாகய தீரன்வெற்பிற்
றேவியொ டாடுஞ் சுரும்பீ ரருத்தந் தெரிந்தல்லவா
காவியந் தாங்கி வரலாம் படிக்கவெக் காலத்துமே. (௬௪)

